செய்தி வெளியீடு எண் :- 459 நாள் 03.08.12

## ANNEXURE -I

### தமிழ்நாடு அரசு

### பொது (பொது.1)க் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9

இந்திய அரசின் உயரிய விருதான பத்ம விருதுகள் 1954 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ என மூன்று வகைகளில் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு திருநாளன்று நடுவண் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கலை, இலக்கியம். கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியல் மற்றும் பொறியியல், பொது நலன், குடிமைப் பணி, வணிக மற்றும் தொழில் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் செய்யப்பட்ட தனித்துவமான சாதனைகள்/ பணிகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது, சாதி, தொழில், தகுதி அல்லது பால் இனம் ஆகியவற்றில் வேறுபாடுன்றி அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

2013–ஆம் ஆண்டு வழங்கப்படவுள்ள விருதிற்கு தகுதியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விவரக் குறிப்புகள் (Nominations) உரிய படிவத்தில் கூடுதல் விவரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் செயலாளர், பொதுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 அவர்களுக்கு **31.08.2012**–க்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலும் இவ்விளம்பரம் மற்றும் உரிய படிவத்தினை http://www.tn.gov.in என்ற இணைய தளம் மூலம் பதிவிறக்கம் (downloading) செய்து கொள்ளலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் இவ்விருதிற்கென அமைக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு நடுவண் அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுவர்.

அரசுச் செயலாளர்.
பொதுத்துறை.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9